விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 23 சனிக்கிழமை (9-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 13

# மட்டக்களப்பில் அதிரடிப் படையினரால் 30 அப்பாவித் தமிழர்கள் படுகொலை!

சாவகச்சேரி, டிச. 9

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பில் அப்பாவிப் பொதுமக்கள் முப்பது பேர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 5 ஆம் திகதி இடம்பெற்ற இப்படுகொலைச் சம்பவத்தை மூடி மறைக்கவும் —

அந்தப் பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்தவும் — தொடர்புச் சாதனங்கள் மூலம் ஸ்ரீலங்கா அரசு பகீரதப்பிரயத்தனம் செய்த போதும், பொய்ப்பிரசாரம் செய்தபோதும், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதுபற்றிய உண்மையை வெளியிட்டதை அடுத்து அரசின் பிரசாரம் பொய்த்துப்போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்புப் பகுதியில் 30 அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டதாகவும் —

சம்பவம் நடைபெற்ற பின்னர் அப்பகுதிக்கு வெளியார் செல்ல படையினர் 48 மணி நேரம் தடை விதித்திருந்தனர் என்றும் —

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும் — இந்த நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருந்தார்.

இம்மாதம் 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சிங்கக் கொடியை ஏற்றியதும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தரை வழிப் பாதையை திறப்பதற்கு விரைவில் புது ராணுவ நடவடிக்கை

## ஜனாதிபதி சந்திரிகா நேற்று அறிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 9

**விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகள் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு ஒரு தரைவழிப் பாதையைத் திறப்பதற்கான புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றைப் படையினர் விரைவில் ஆரம்பிப்பர்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர்கள் மாநாட்டில் இவ்வாறு அறிவித்தார்.

எனினும் இந்த ராணுவ நடவடிக்கை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவிக்கவில்லை.

யாழ்ப்பாண நகரை ஸ்ரீலங்கா இராணுவம் கைப்பற்றிய பின்னர் ஸ்ரீலங்கா ஜனாதிபதி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அண்மையில் நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி, புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு மூன்று நிபந்தனைகளை முன்வைக்கும் அறிவிப்பு ஒன்றை அங்கு வைத்து வெளியிட்டிருந்தார்.

அடையாள நடவடிக்கையாக சில ஆயுதங்களைப் புலிகள் கீழே வைக்க வேண்டும் என்ற நிபந்தனை அதில் ஒன்றாக இருந்தது.

ஆனால் இந்த நிபந்தனையை சந்திரிகா நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பின் போது மாற்றிக்கொண்டார்.

''தமிழீழ விடுதலைப் புலிகள் எமது அரசு முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் சிலர் இன்று படையினரால் விடுவிப்பு

சாவகச்சேரி, டிச. 9

யாழ்ப்பாணத்தில் பல்வேறு சமயங்களில் படையினரிடம் சிக்கிய பொதுமக்களில் சிலர் இன்று பருத்தித்துறைக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளால் அழைத்து வரப்படவிருக்கின்றனர்.

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் 'ஹபரண' கப்பல் மூலம் இவர்களை பருத்தித்துறைக்கு அழைத்துவர ஏற்பாடாகியுள்ளது.

எத்தனை பேர் வருகிறார்கள் என்பது குறித்து நேற்று மாலை வரை உறுதியான தகவல் கிடைக்காத போதும்—

20 பேர் மட்டில் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3)

# கிளாலி நீரேரித் தடையை நீக்க ஐ. நா. செயலர் உதவ வேண்டும்

## கிளிநொச்சி பிரசைகள் குழு அவசர கடிதம்

சாவகச்சேரி, டிச. 9

ஸ்ரீலங்கா இராணுவத்தின் மரணப் பொறிக்குள் அகபபடாமல் யாழ். குடாநாட்டு மக்களைப் பாதுகாக்க, கிளாலி நீரேரி மீதான போக்குவரத்து தடையை நீக்க ஐக்கிய நாடுகள் சபை ஆவன செய்யவேண்டும்.

இவ்வாறான ஒரு அவசர கோரிக்கையை ஐ. நா. செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலியிடம் கிளிநொச்சி மாவட்ட பிரசைகள் குழு விடுத்திருக்கிறது.

ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு கிளிநொச்சி பிரஜைகள் குழு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அந்த கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் நிரந்தரமாகவும், இடம்பெயர்ந்து வந்தும் தங்கியுள்ள மக்கள் மரணப் பொறிக்குள் அகப்படுகின்ற சூழ்நிலை ஏற்படலாம்.

அரசாங்கம் கிளாலி நீரேரியைப் போக்குவரத்துக்குத் தடை செய்துள்ளது. அது மட்டுமன்றி இரண்டாம் கட்டப் படை நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாகவும் அறிவித்திருக்கிறது.

படைகளின் விமானக் குண்டு வீச்சில் இருந்தும், ஷெல் தாக்குதல்களில் இருந்தும் தப்புவதற்காக கிளாலி நீரேரியைக் கடந்து படகு

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலங்கா அரசு மிகவும் மோசமான நெருக்கடிக்குள் சிக்கப் போகிறது

## லண்டன் ரைம்ஸ் கருத்து

லண்டன், டிச. 9

தற்போது இருப்பதை விடவும் இலங்கை அரசு கூடுதலான இராணுவ, பொருளாதார, அரசியல் நெருக்கடிக்குள் சிக்கப்போகிறது.

லண்டனில் நேற்று வெளியான 'ரைம்ஸ்' பத்திரிகை இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் நாடு முழுவதும் கெரில்லாப் போர் நடத்தி தங்களின் 12 வருட காலப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தவுள்ளனர் என்றும் —

தலைநகர் கொழும்பு அவர்களின் முக்கிய இலக்காக இருக்கும் என்றும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசு இன்னும் கூடுதலான அரசியல், பொருளாதார இராணுவ குழப்பத்துக்குள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்தோருக்கான உதவி பணம் வழங்க ஏற்பாடு

தென்மராட்சி, டிச. 9

வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ளோரின் மாதாந்த உதவிப் பணம் —

மற்றும் புற்றுநோய், காசநோய், தொழுநோய் ஆகியவற்றுக்கான உதவிப் பணம் என்பனவற்றை வழங்க தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை பதிவு செய்யாதவர்கள், தாம் தங்கியுள்ள தென்மராட்சிப் பிரிவு கிராம அலுவலரிடம் தமது மாதாந்த கொடுப்பனவு அட்டை, அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்குமாறும்—

மாதாந்த கொடுப்பனவு அட்டைகளை தொலைத்தவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன், தங்கியுள்ள பகுதி கிராம அலுவலரிடம் தமது பெயர்களைப் பதிவு செய்து, இக்கொடுப்பனவு வழங்குவதைத் துரிதப்படுத்த ஒத்துழைக்குமாறும் — தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (இ-117)

## கட்டட ஒப்பந்தக்காரர் கவனத்துக்கு

சாவகச்சேரி, டிச. 9

கோண்டாவிலைச் சேர்ந்த பாமினி என்ஜினியஸ் உரிமையாளரான திரு. பாலசுந்தரம், மற்றும் அரியாலையைச் சேர்ந்த திரு. சிறீகாந்தன் ஆகிய இரு கட்டட ஒப்பந்தகாரர்களையும் உடன் தமிழீழ நிர்வாக சேவையின் பொறியியற் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளரால் கோரப்பட்டுள்ளது. (இ)

# அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல்

சாவகச்சேரி, டிச. 9

பாடசாலை வேலைக் கொடுப்பனவு சம்பந்தமான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பின்வரும் பாடசாலைகளின் அதிபர்களை தத்தமது பாடசாலை அபிவிருத்திச் சபையின் றப்பர் முத்திரையுடன் வந்து கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

மண்டைதீவு ம. வி., உடுப்பிட்டி அ. மி. த. க. பா., பெரியபுலம் ம. வி., வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், இயற்றாலை அ. மி. த. க. பா.,

மாமுனை அ. த. க. பா, எழுதுமட்டுவாழ் சி. சி. த. க. பா., ஹாட்லிக் கல்லூரி., கலட்டி றோ. க. த. க. பா., பெரியவிளான் றோ. க. த. க. பா.,

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க. த. க. பா., சண்டிலிப்பாய் ம. வி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி., தெல்லிப்பளை சைவப்பிரகாசா வித்தி., பளை வீமன்காமம் வித்தி.,.

அளவெட்டி அருணோதயா கல்லூரி, மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தி., இராமநாதன் கல்லூரி, ஸ்கந்தவரோதயா கல்லூரி, நீர்வேலி வடக்கு றோ. க. த. க. பா,

அல்வாய் சின்னத்தம்பி வித்தி., வதிரி மெ. மி. பா., தாளையடி றோ. க. க. த. பா, வட்டு. இந்துக் கல்லூரி,

சங்கானை சிவப்பிரகாசம் வித்தி, சித்தங்கேணி கணேசா வித்தி, சங்கரத்தை சின்னம்மா வித்தி., அல்வாய் சின்னத்தம்பி வித்தி., இணுவில் இந்துக் கல்லூரி,

வட்டு திருஞானசம்பந்தர் வித்தி., கரணவாய் பொன்னம்பலம் ம. வி., மாதகல் விக்கினேஸ்வரா வித்தி., உடுவில் அ. மி. த. க. பா., உடுவில் மான்ஸ்,

அச்செழு சைவப்பிரகாச வித்தி., கோப்பாய் ஸ்கந்தவேள் வித்தி, அச்சுவேலி வடக்கு றோ. க. த. க பா., கொழும்புத்துறை துரையப்பா வித்தி., கொழும்புத்துறை சென். யோசப் வித்தி.

சண்டிலிப்பாய் அ த. க. பா., சில்லாலை றோ. க. க. பா., இளவாலை றோ. க. த. க. பா., மாதகல் விக்னேஸ்வரா வித்தி. கரணவாய் ம. வி.

கற்கோவளம் அ. மி. த. க. பா., வல்வை சிவகுரு வித்தி., மல்லாகம் ம. வி., சுழிபுரம் கிழக்கு அ. த. க பா., தொல்புரம் அ. மி. த. க. பா., வட்டு கார்த்திகேயா வித்தி., சங்கானை சைவப்பிரகாசா வித்தி., ஏழாலை சன்மார்க்க வித்தி., இணுவில் மத்திய கல்லூரி., அச்சுவேலி சைவப்பிரகாச வித்தி., அரியாலை பார்வதி வித்தி., அரியாலை கிழக்கு அ. த. க. பா., கொக்குவில் இந்துக்கல்லூரி. (ஐ)


## பருத்தித்துறை பிரதேச சபை கேள்வி அறிவித்தல்

1996 ஆம் ஆண்டு

இறைச்சிக் கடைகள், சந்தைகள் குத்தகை.

கேள்விப் படிவம் வழங்கல் —
21-12-1995 பி.ப. 3 மணி வரை

கேள்விப் படிவம் ஏற்றல் —
22-12-1995 பி.ப. 2 மணி வரை

கேள்விப் படிவம் திறத்தல் —
22-12-1995 பி.ப. 2.30 மணி வரை

மேலதிக விவரங்களை பருத்தித்துறை பிரதேச சபையிலும், அதன் புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஆ. சிவசுவாமி,
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி,
07-12-1995. (சி/3136)


இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி

# அரச ஊழியருக்கு விசேட அலவன்ஸ்; கொள்கையளவில் அரசு இணக்கம்

சாவகச்சேரி, டிச. 9

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆபத்துக் கால விசேட அலவன்ஸ் இராணுவக்கட்டுப்பாடற்ற மாவட்டங்களில் பணியாற்றும் அரச ஊழிர்களுக்கும் வழங்க அரசு கொள்கை அளவில் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு சென்றிருந்த யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி ந. கனகரத்தினம் அங்கு அரச அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களில் இந்த இணக்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சுற்றறிக்கை ஒன்று விரைவில் வெளிவரவிருக்கிறது என்றும் பணிப்பாளர் தெரிவித்தார்.

சிங்கள எல்லைக் கிராமங்களிலும், கிழக்கிலும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளில் இந்த விசேட அலவன்ஸ் தற்சமயம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# நிவாரணப் பொருளுடன் 'லங்கா முடித' அடுத்த வாரம் வடக்கே வருகிறது

சாவகச்சேரி, டிச. 9

இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களுடன் ''லங்கா முடித'' கப்பல் அடுத்த வாரம் பருத்தித் துறைக்கு வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து புறப்பட்டுள்ள இக்கப்பல் திருகோணமலையில் தரித்து நிற்கும் என்றும் —

தற்சமயம் பருத்தித்துறையில் நிற்கும் 'லங்கா கல்யாணி' எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பொருள்களை இறக்கி முடித்து விட்டு திருகோணமலைக்கு திரும்பியதும் 'லங்கா முடித' கப்பல் பருத்தித் துறைக்கு வரும் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)

பெரும் இழப்புக்களை விலை கொடுத்து

# படையினர் மீட்ட பிரதேசத்தை மீண்டும் தமிழருக்கு கொடுப்பதா?

## தென் பகுதிச் சிங்களவர் எழுப்பும் கேள்வி இது

கொழும்பு, டிச. 9

இத்தனை இழப்புகள், நஷ்டங்களுடன் விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிய பிரதேசத்தை அரசு முன் வைக்கவுள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் மூலம் மீண்டும் சிறுபான்மையினத் தமிழர்களுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டுமா?

தென்பகுதிச் சிங்களமக்கள் மத்தியில் தற்போது இவ்வாறு கேள்வி எழுப்பப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்களின் படி அரசுக்கு தற்போது இரு முக்கிய வழிகள் உள்ளன.

யாழ்ப்பாண மக்களை மீண்டும் நகருக்கு வரச் செய்வதற்காக மிகப்பெரிய அளவிலான புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.

புலிகளுடன் தொடர்ந்து போரிடுதல். — என்பனவே அவ்விரு வழிகளும் ஆகும். — என்றும் பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. (ஐ-7)

# தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த 6 பிரதிநிதிகள் ஹபரணவில் வந்தனர்

வடமராட்சி, டிச. 8

தொண்டர் நிறுவனங்களை சேர்ந்த 6 பிரதிநிதிகள் நேற்று ஹபரண கப்பல் மூலம் பருத்தித்துறை வந்து சேர்ந்தனர்.

றெட்பானாவைச் சேர்ந்த கொழும்பு வதிவிடப் பிரதிநிதி தோர்ஸ்ரெக்னி, ஏ. ஜி. எஸ். பாலச்சந்திரன், போரூட்டைச் சேர்ந்த ஒஸ்ரின் பெக், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த பற்றிக் டி ஒஸ்ட், பற்றிக் மொறின், கிறேஸ்பிறி ஆகிய அறுவருமே இங்கு வந்தவர்களாவர்.

இவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை இதே கப்பலில் திருகோணமலை சென்று கொழும்பு பயணமாவார்கள்.

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் தொண்டர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதே இவர்களின் விஜயத்தின் நோக்கம் ஆகும்.

அதே சமயம் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு நான்காம் கந்தாய மருந்து வகைகளும் எரிபொருள்களும் ஹபரண கப்பலில் வந்து சேந்துள்ளன.

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளரும் இக் கப்பலிலேயே வந்தார்.

இதுதவிர, பருத்தித்துறையில் உள்ள ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் (யு என். எச். சி. ஆர்.) செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொரு பிக் அப் [illegible] இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கை வங்கிக்கான பொதி ஒன்றும் வங்கி ஊழியர் ஒருவரால் எடுத்து வரப்பட்டுள்ளது. (இ-173)

# கடிதங்களைப் பெறுமாறு தபால் பகுதி அறிவிப்பு

அண்மையில் 'குமண' கப்பலில் கொண்டு வரப்பட்ட அனைத்து தபால் பொதிகளும் தரம் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பகுதி தபால் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பகுதியில் இயங்கி வரும் பின்வரும் வலிகாமம் பகுதி தபால் நிலையங்களில் பெருமளவு தபால்களும் பதிவுத் தபால்களும் தேங்கியுள்ளதால் பொது மக்கள் தமது தபால்களை விரைவில் பெற்று ஒத்துழைக்குமாறு யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. அ. க. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார்.

வலிகாமம் பகுதி அஞ்சல் அலுவலகங்கள் தற்போது தென்மராட்சிப் பகுதியில் இயங்கும் இடங்களின் விவரம் வருமாறு:-

★ யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையம், சுழிபுரம், காரைநகர், ஆனைக்கோட்டை ஆகிய தபால் நிலையங்கள், சண்டிலிப்பாய், மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய உப தபால் நிலையங்கள் என்பன சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில்.

★ கோப்பாய், பண்டத்தரிப்பு, வயாவிளான், உரும்பிராய், சங்கானை, வேலணை, புங்குடுதீவு ஆகிய தபால் நிலையங்களும், நீர்வேலி, இளவாலை ஆகிய உப தபால் நிலையங்களும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில்.

★ மானிப்பாய், தபால் நிலையம் சாவகச்சேரி பழைய பொலீஸ் நிலைய வீதியில் உள்ள வீட்டில்.

★ கொக்குவில், அளவெட்டி தபால் நிலையங்களும் கோண்டாவில் உப தபால் நிலையம் ஆகியவை மிருசுவில் உப தபால் நிலையத்தில்.

★ காங்கேசன்துறை, சித்தன்கேணி ஆகிய தபால் நிலையங்கள் கச்சாய் உப தபால் நிலையத்தில்.

★ தெல்லிப்பளை தபால் நிலையம் மீசாலை உப தபால் நிலையத்தில்.

★ சுன்னாகம் தபால் நிலையம் சரசாலை வடக்கில் உள்ள வீட்டில். (ஐ-117)

## விலை குறைப்பு

பருப்பு, உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகளை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் குறைத்துள்ளது.

இதன் படி ஒரு கிலோ பருப்பின் விலை 42 ரூபாவில் இருந்து 40 ரூபாவாகவும் —

ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை 45 ரூபாவில் இருந்து 40 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைக்கு சொற்ப காலத்தில் தீர்வு காண்பது கஷ்டமான காரியம்

## நாடாளுமன்றில் அனுருத்த

கொழும்பு, டிச. 9

இலங்கையின் இனப்பிரச்சினை நீண்டகாலப் பிரச்சினை. இதற்கு சொற்பகாலத்தில் தீர்வு காண்பது மிகவும் கஷ்டமான காரியம்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அவசரகால நிலையை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பதில் அளித்துப் பேசுகையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் 107 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் மேலும் உரை நிகழ்த்துகையில், நாட்டில் விரைவில் அமைதியை ஏற்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அரசாங்கம் மூன்று திட்டங்களை செயற்படுத்த உறுதி பூண்டுள்ளது.

முதலாவது சமாதானத்துக்கு எதிரானவர்களைத் தோற்கடிப்பது.

இரண்டாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் தீர்வு ஒன்றை முன்னெடுத்துச் செல்வது. இதற்கான நடவடிக்கையை அரசாங்கம் தற்போது ஆரம்பித்துள்ளது.

மூன்றாவது படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வது.

புலிகளை முறியடிப்பது ஒழுங்கான திட்டம் ஒன்றின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார். (இ)

## தேசிய தினம் பிரகடனப்படுத்த யோசனை

யுத்த முனையில் வெற்றி பெற்ற படையினரின் சேவைகளைக் குறிக்கும் வகையில் தேசிய தினம் ஒன்றை பிரகடனம் செய்ய வேண்டும் என்று அமைச்சர் சி.வி. குணரத்தின கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவசரகால நீடிப்பு பிரேரணை மீதானவிவாதத்தில் பேசுகையில் அவர் இதனைத்தெரிவித்தார். (இ-3)

## கிருமி நாசனி

தென்மராட்சி, டிச 9

மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் விவசாயத்துக்குத் தேவையான விதை தானியங்களும், கிருமி நாசனியும் விற்பனை செய்யப்படுகின்றன.

## தென்மராட்சியில் தொற்று நோய்

## மருந்து வகைகளை உடன் அனுப்புமாறு கோரிக்கை

சாவகச்சேரி, டிச. 9

தென்மராட்சிப் பகுதியில் தீவிரமாக பரவிவரும் தொற்றுநோய்களை கட்டுப்படுத்த மருந்து வகைகளை அனுப்புமாறு அவசர கோரிக்கை ஒன்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை இந்த அவசர கோரிக்கையை விடுத்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வழங்கும் மருந்து வகைகளையே தமது வைத்திய சேவைக்கு செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பயன்படுத்தி வருகிறது.

வயிற்றோட்டம், கண் நோய், தோல் வியாதிகள் தீவிரமாக பரவி வருவதாகவும்—

அவற்றைக் கட்டுப்படுத்த போதிய மருந்து இல்லை என்றும் — அந்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் பின்வருவோருக்குத் தகவல்கள்

வடமராட்சி, டிச. 9

பின்வரும் பொதுமக்களுக்கு கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் இருந்து தனிப்பட்ட முறையிலான தகவல்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்குக் கிடைத்துள்ளன.

உரியவர்கள் பருத்தித்துறையில் உள்ள செ. ச. சர்வதேசக் குழு அலுவலகத்தில் அத்தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவல்கள் கிடைத்திருப்போரின் பெயர், முகவரி விவரம் வருமாறு:-

பொன்னுத்துரை நாகராசா ஐந்து சந்தி, அபுபக்கர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

சிவநாதன் சுதர்ஜினி 171/1, முதலாவதுஒழுங்கை, அரசடி, நல்லூர், யாழ்ப்பாணம்.

எஸ். மோகன்தாஸ் சரவணமுத்து, 321, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எஸ். அன்னலிங்கம், வேம்பல் ஒழுங்கை, உரும்பிராய், தெற்கு, உரும்பிராய்

லலிதாம்பாள் தாசன், 141, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை விசாரணை மாத இறுதிக்குள் பூர்த்தி

### அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

சென்னை, டிச. 9

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் விசாரணையை இம்மாத முடிவுக்குள் முடித்துவிட சாத்தியமான அனைத்தையும் செய்வதாக, இந்த வழக்கை புலனாய்வு செய்து வரும் சிறப்புப் புலனாய்வுத்துறை உறுதியளித்திருப்பதாக, வழக்கை ஒருங்கிணைக்கும் பணிக்கு பொறுப்பான வர்த்தக அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி படுகொலை மற்றும் கொலைக்கான சதி ஆகிய தொடர்பாக அவர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணை எந்த வித இடையூறும் இன்றி நடக்கவேண்டும் என்பதே அரசின் விருப்பம் என்றும் அவர் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையுடன் தொடர்புள்ள முக்கிய ஆவணங்களுடனான கோவை ஒன்று காணாமற்போயிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## பொலீஸ் தலைமையகம் யாழ். நகரில் இயங்குமாம்

கொழும்பு, டிச. 9

யாழ்ப்பாணத்தில் உள்ள பொலீஸ் நிலையம் வடபிராந்திய தலைமை அலுவலகமாகச் செயற்படும் என்று பொலீஸ்மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு தெரிவித்தார்.

அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு ஆகிய இடங்களில் ஏற்கெனவே பொலீஸ் நிலையங்கள் திறந்துவைக்கப் பட்டுள்ளன. கோப்பாயில் பொலீஸ் நிலையம் ஒன்றைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிதாகப் பயிற்சிபெற்ற 300 பொலீஸார் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளனர். யாழ்ப்பாணத்தில் பொலீஸ் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் நிறுவப்படும் என்றும் அவர் கூறினார். (இ)

## போர்க்களம் ஓடு!

மற்றவர் கைகளை நம்புதல் மடமை
வாழ்வினைக் காப்பது அவரவர் கடமை

கட்டிய வீட்டினைக் காப்பதுன் கடமை
கமம் புலம் காப்பதும் கவனி! உன் கடமை
விட்டு நீ ஓடுதல் வெட்கம் உன் மானம்
விலைபோக விட்டு நீ மிஞ்சுதல் ஈனம்!

வரவர எதிரியை மறங்கொண்டு வீழ்த்து
வலிமையை முதலில் நீ மனதினில் ஏற்று
திருடவும் அழிக்கவும் சிங்கள எலிகள்
திரண்டிங்கு வரக்கண்டும் ஒதுங்குமோ புலிகள்?

நல்லவன் வல்லவன் ஆகிடும் போது
நானிலம் அவனது காலடி வீழும்
நல்லவர் — வல்லவர் ஆகுவம் தமிழர்
நாடிது மீண்டிட நாம்முதல் உழைப்போம்!

நாடென்று முதலில் நீ நாடிநில் தமிழா
நாடின்றி உனக்கொரு வீடில்லை எங்கும்!
ஓடின்று போர்க்களம்! ஓட்டிடு பகையை!
உன்னெழில் வீடுன்னை உள்ளிழுத் தேத்தும்!

— ச.வே. பஞ்சாட்சரம்

# வயிற்றோட்ட நோயும் அதனை கட்டுப்படுத்தும் வழி முறைகளும்

*வயிற்றோட்ட நோய் தற்போது தென்மராட்சியில் வேகமாகப் பரவி வருகிறது. தினமும் 50 பேருக்கு மேற்பட்டோர் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்படுகின்றனர். வயிற்றோட்டம் ஏற்படுவதற்கான காரணிகள், அந்த நோயைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியினால் அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பின் சாரம் வருமாறு:-*

அசாதாரணமாக இரண்டு அல்லது மூன்று தடவைகளுக்கு மேலாக நீராக மலம் கழிவதை வயிற்றோட்டம் என்று குறிப்பிடலாம்.

வயிற்றோட்டம் நீரிழப்பை ஏற்படுத்துவதனால் மரணம் சம்பவிக்கிறது. அது மட்டும் அல்ல பாதிக்கப்பட்டோரில் போசாக்கின்மையும் ஏற்பட வாய்ப்புண்டு.

வயிற்றோட்டம் ஏற்படுவதற்கான காரணங்கள் அதனைத் தடுக்கும் வழிமுறைகள் வருமாறு:

★ பாதிக்கப்பட்டோரின் உடலில் இருந்து கூடுதலான நீர் வெளியேறுவதனால் மரணங்கள் சம்பவிக்க முடியும். எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு இழந்த நீரை ஈடுசெய்யக்கூடிய அளவுக்கு நீராகாரம் கொடுத்தல் வேண்டும். குழந்தைகளுக்கு தாய்ப்பால் தொடர்ந்து கொடுத்தல் வேண்டும்.

★ இழந்த நீரை ஈடுசெய்ய நெல்லுப்பொரி நீர், கஞ்சி, இளநீர், தேநீர், கொதித்தாறிய நீர், தேசிக்காய் நீர், பழச்சாறு முதலியவற்றை கொடுக்கலாம்.

★ அத்துடன் 'ஜீவனி'யை [illegible] மூலம் [illegible] தடுக்கலாம். ஒரு பைக்கட் ஜீவனியை ஒரு லீற்றர் நீரில் கரைத்தல் வேண்டும். (1 லீற்றர் - 5 எவர் சில்வர் ரம்ளர் நீர்) 'ஜீவனி' கிடைக்காவிடில் சீனி — உப்பு சேர்கரைசல் கொடுக்கலாம். (4 தேக்கரண்டி மட்டமாக வெட்டி எடுத்த சீனியுடன் அரை தேக்கரண்டி மட்டமாக எடுத்த கறி உப்பை ஒரு லீற்றர் நீரில் கரைக்கவும்).

பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உணவு தேவை. வயிற்றோட்டம் இருக்கும்போது லேசாக சீரணிக்கக்கூடிய உணவுகள் ஊட்டலாம், பிஸ்கட், றோஸ்ற் பண்ணிய பாண், இடியப்பம், சொதி, உப்புக்கஞ்சி போன்றவைகளை ஊட்டலாம். குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 5 அல்லது 6 தடவைகளுக்கு மேல் உணவு ஊட்டுதல் வேண்டும்.

★ தாய்ப்பால் ஊட்டும் குழந்தையாகில்' தாய்ப்பால் தொடர்ந்து ஊட்டப்படல் வேண்டும். பால்மா பாவிக்கும் குழந்தையாகில் பால்மா தொடர்ந்து ஊட்டப்படல் வேண்டும்.

★ குணமடைந்த குழந்தைக்கு மேலதிகமாக ஒரு வேளை ஆகாரம் குறைந்தது இருவாரங்களுக்கு அளிக்கப்படல் வேண்டும். இதன் மூலம் குறிப்பிட்ட நோய்த் தாக்கத்தின்போது இழந்த போசணை நிலையை மீளப் பெறமுடியும்.

★ வயிற்றோட்டம் தீவிரமடையின், அல்லது மலத்தில் இரத்தம் சீதம் காணப்படின் அண்மையில் உள்ள வைத்திய சாலையை நாடுங்கள். வயிற்றோட்டத்துடன் காய்ச்சல், வாந்தி முதலியன காணப்பட்டால் மேலும் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

'ஜீவனி' தவிர்ந்த ஏனைய மருந்துகள் வைத்திய ஆலோசனையின்றிப் பாவிக்கக் கூடாது. பாவிப்பதனால் கூடிய தீங்குகள் ஏற்படும். மருந்து வைத்திய ஆலோசனையின் படியே வழங்கப்படுதல் வேண்டும்.

★ தாய்ப்பால் ஊட்டல், குழந்தைகளுக்குச்சின்னமுத்து தடை மருந்து பாச்சுதல், மலகூடம் பாவித்தல். குடிக்கும் நீர், உணவை துப்புரவான சூழலில் பெறுதல், உணவைத் தொடமுன் கைகளைத் துப்புரவாக வைத்திருத்தல் முதலியன மூலம் வயிற்றோட்டத்தைத் தடுக்கலாம்.

★ வயிற்றோட்டம் நுண் கிருமிகள் வாயிலாக உட்செல்வதனால் வயிற்றோட்டம் உண்டாகிறது. நீர், உணவு கைவிரல்களில், ஈ, முதலிய ஏதுக்கள் ஊடாகவே பரவுகின்றது

வறுமை, அடிப்படை வசதிகளாகிய துப்புரவான குடி நீர் மலசலகூடம் பாவிக்காமை ஆகிய காரணிகளால் இந்நோயைக் கட்டுப்படுத்தல் கஷ்டமாகவுள்ளது. தடுக்கும் முக்கிய முறைகளாவன.

1. தாய்ப்பால் மாத்திரம் குழந்தையின் முதல் 6 மாதங்களுக்கு ஊட்டுதல் வேண்டும்.

2. ஆறு மாதத்தின் மேல் தாய்ப்பாலுடன் இலேசாகச் சீரணிக்கக்கூடிய உணவு ஊட்டவும். (கஞ்சி முதலியன)

3. குழந்தைகளுக்கு பால்மாக் கரைத்துக் கொடுக்கும்போது பால் போத்தலுக்குப் பதில் கரண்டியும், கோப்பையும் பாவிக்கவும்.

4. கொதித்தாறிய நீரைப் பாவிக்கவும்.

5. மலகூடம் பாவிக்கவும். குழந்தையின் மலமாகிலும் மலகூடத்தில் இடவும்.

6. மலம் கழித்த பின்பும்' உணவு தயாரித்து பரிமாறு முன்பும், உணவை உண்ணு முன்பும் சவர்க்காரம் இட்டுக் கழுவ வேண்டும்.

7. ஈ மொய்க்காது, உணவு மூடப்படல்வேண்டும்.

8. கழிவுகள் எரிக்கப்படல் அல்லது புதைக்கப்படல் வேண்டும்.

சின்னமுத்துஏற்படின் வயிற்றோட்டம் சம்பவிக்கமுடியும். எனவே சின்னமுத்து தடை மருந்துகுழந்தைகளுக்கு அதன் ஒன்பதாவது மாதத்தில் போடப்படல் வேண்டும். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னி செல்வதற்காக மக்கள் கிளாலி நோக்கிப் படையெடுப்பு

தென்மராட்சி, டிச. 9

வன்னிக்குச் செல்வதற்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் கிளாலி நோக்கிப் படையெடுத்து வருகின்றனர்.

கடந்த மூன்று நாள்களாக கிளாலிக் கரையில் சனக்கூட்டம் நிறைந்து காணப்படுகிறது.

படகுச் சேவை பகலும் இரவும் தொடர்ச்சியாக நடத்தப்படுவதால் கிளாலிக்கு வரும் மக்கள் உடனுக்குடன் மறுகரைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

தினமும் காலை முதல் வாகனங்களிலும் கால்நடையாகவும் தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கிளாலிக் கரைக்கு அனைத்து வீதிகளூடாகவும் சென்றபடி உள்ளனர்.

மறுகரைக்குக் கொண்டு செல்ல ஆயிரக்கணக்கான சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் கிளாலிக்கரையில் வரிசையில் நிறுத்தப்பட்டுள்ளன.

வலிகாமம் பகுதி வர்த்தகர்கள் பலர் தமது வர்த்தகப் பொருட்களை லொறிகளில் ஏற்றிக்கொண்டு செல்கின்றனர்.

சுமார் மூன்று மைல் நீளமான கிளாலிக் கடற்கரையில் மக்கள் வெள்ளமும், வாகனங்களுமே காட்சிதருகின்றன. மறுகரைக்குச் செல்வதற்காக மக்கள் முண்டியடித்தவண்ணமுள்ளனர்.

மக்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ-117)

# மரக்கறி, மீன், உணவு வகைகள் தெமராட்சியில் விலை உயர்வு

எழுதுமட்டுவாள், டிச. 9

வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் அனேகமானோர் தென்மராட்சிப் பகுதியில் தங்கியிருப்பதால் உணவுப் பொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

அரிசி, சீனி, மா போன்ற அத்தியாவசிய உணவு பொருள்களின் விலை வெகுவாக அதிகரித்திருப்பதோடு சீனிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஒரு கிலோ சீனி சில தனியார் வியாபார நிலையங்களில் 70 முதல் 90 ரூபா வரை விற்கப்படுகின்றது.

எழுதுமட்டுவாள் பொதுச் சந்தையில் மரக்கறி மட்டுமன்றி மீன்வகைகளும் உச்ச விலையில் விற்பனையாகின்றன.

மரக்கறிகளின் விலையும் உயர்வாகவே காணப்படுகின்றது.

கத்தரிக்காய் கிலோ 200 ரூபாவாகவும், உருளைக் கிழங்கு கிலோ 200 ரூபாவாகவும், பயற்றங்காய், பாவற்காய், வெண்டிக்காய், புடோல் போன்றவை 100 ரூபா முதல் 150 ரூபா வரையிலும் விற்கப்படுகின்றன.

உணவுப் பொருள்கள், மரக்கறி வகைகவின் விலையுயர்வால் அநேகமான மக்கள் பாணுடன் பருப்பு, சோயா மீற் மற்றும் முசுட்டை, முருங்கை இலை, போன்ற இலைவகைகளையுமே தமது உணவுத் தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

(ஐ-152)

# சந்திரிகாவுக்கு ஜே. ஆர். பாராட்டு

கொழும்பு, டிச. 9

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்காப் படைகள் எய்திய வெற்றிக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

முழு இலங்கையும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தினால் ஆட்சி செய்யப்படவேண்டும் என்றும் ஜே. ஆர். தெரிவித்துள்ளார்.

(இ)

# வடமராட்சி ஊடாக பளைக்கு பஸ்

கரணவாய், டிச. 9

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடாக பளை வரைக்குமான சிற்றூர்திச் சேவை ஒன்றை ஆரம்பிக்க வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்பாதையைப் பயன்படுத்தி வெளியிடங்களுக்குச் சென்றுவரும் மக்கள் இதனால் பெரிதும் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-80)

# புதிய போராளிகள் இணையும் செயலகங்கள்

## மேலும்பலஇடங்களில்திறக்கப்பட்டன

சாவகச்சேரி, டிச. 8

விடுதலைப் போராட்டத்தில் தம்மை முழுமையாக இணைத்துக் கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்து புதிய போராளிகள் இணையும் செயலகங்கள் வேறும் பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில நாட்களில் கூடுதலானோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துள்ளனர்.

வலிகாமத்தை சிங்கள படைகள் ஆக்கிரமித்த பின்னர் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் போராட்டத்திலே இணைய ஆர்வம் காட்டியுள்ளனர்.

பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகளின் பாசறைகளுக்கு அனுப்பி வருகின்றனர்.

இடம் பெயர்ந்து வன்னிக்குச் சென்றுள்ள மக்களிலும் கணிசமானோர் போராட்டத்தில் இணைந்து வருகின்றனர்.

(இ-7)


## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மூன்று மொழிகளில் றபர் சீல் செய்து கொள்ளும் சகல உபகரணங்களும் பிளாஸ்ரிக் போட் 2' X1' நீள அகல சகல நிறங்களிலும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கோணேஸ் கண்டுவில் லேன், கண்டி வீதி, சாவகச்சேரி. (39345)

வீட்டு தளபாடங்கள் வேப்பம் அலுமாரி, கதிரைகள், மேசை இரண்டு லாச்சிகளுடன், ரீ போய், மற்றும் அம்மி, ஆட்டுக்கல்லு, திரிகை வேறு பொருள்களும் பார்வையிட்டு வாங்கலாம். மு. நாகராசா கணேசா பள்ளிக்கூட மேற்கு ஒழுங்கை, சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (39605)

நல்ல நிலையில் உள்ள 'சாளி' மோட்டார் சைக்கிள், ஏசியா சைக்கிள் ஆகியவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- மகாதேவன் Master Tutory அருகாமை, விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி. (39476)

### இடமாற்றம்

யாழ். நகரில் இயங்கி வந்த ஜெயா அழகு மாடம் தற்பொழுது கண்டி வீதி, சாவகச்சேரி (கோட் முன்பாக) இயங்குகின்றது என்பதை வியாபாரிகளுக்கு அறியத்தருகின்றேன். (39332)

ஜெயா அழகு மாடம் சாவகச்சேரி பழைய நீதி மன்றக் கட்டடத்திற்கு முன்பாக (கோட்டடி) இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கும் வர்த்தகப் பெருமக்களுக்கும் அறியத் தருகின்றோம். (39317)

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் ஆங்கிலம் பேசப் பயில தனிப்பட்ட முறையிலும் பயிற்சி கொடுக்கப்படும். ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் C/o R. நடராசா மணல் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, (சோமஸ்கந்தா நூல் நிலையம் அருகில்). (39347)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் 1996 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01-01-1996 தொடக்கம் 31-12-1996 வரையிலான காலப்பகுதிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் குத்தகை அறவிடுவதற்கான கேள்விகள் இரு பிரதிகளில் 22-12-1995 ஆம் திகதி காலை 10 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இதே தினம் காலை 11 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

| | கேள்வி விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | மரக்கறிச் சந்தை, வல்வெட்டித்துறை | ரூ. 49,500/- | 1000/- | 100/- |
| 02. | மீன் சந்தை, வல்வெட்டித்துறை | ரூ. 33,600/- | 1000/- | 100/- |
| 03. | மாட்டிறைச்சிக்கடை, வல்வெட்டித்துறை | ரூ. 34,300/- | 1000/- | 100/- |
| | சேவை: | | | |
| | குப்பை கூழங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரப்பெட்டி வாடகைக்கு வழங்குதல் | | ரூ. 250/- | 100/- |

மேற்படி வைப்புப்பணமும் கேள்விப்படிவக் கட்டணங்களும் பணமாகச் செலுத்தப்படுவதன்பேரில் 21-12-1995 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா.

மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ந. ஞானவேல்
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை, 01-12-1995.
[சி/3135]

## தேடுகிறார்

நல்லூர் கோயில் வீதியைச் சேர்ந்த
Dr. ஜெயசோதி [Dental Surgeon] அவர்களை
கந்தர்மடம், அன்னசத்திர ஒழுங்கையைச் சேர்ந்த
திருமதி. ப. கைலாசபிள்ளை தேடுகிறார்.

தொடர்புக்கு:- C/o நாகராசா ஆசிரியர்,
புத்தூர்ச் சந்தி,
துப்பறி வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.

(39481)

## தேடுகிறார்

சுதுமலை வடக்கைச் சேர்ந்த திருமதி இராமநாதன் சர்வலோகேஸ்வரியையும் (யோகம்) அவரது மகள் எழிலையும், சண்முகநாதன் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளரையும், அவரது மனைவி பேபி அக்காவையும் தேடுகிறார். எங்கிருந்தாலும் உடன் தொடர்பு கொள்ளவும்.

Dr. ஆ. சிவபாதம்
மே/பா. ஆ. சண்முகலிங்கம்
கைதடி மேற்கு,
கைதடி.

(39607)

## சந்திக்கவும்

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் இல. 60 திருமதி நவரத்தினம் - புஷ்பராணி ஆசிரியையின் இல்லத்தில் தற்போது வசிக்கும் து. அநியமான் கோண்டாவிலைச் சேர்ந்த

மெக்கானிக் செல்வம் என்பவரை

முக்கிய விடயம் தொடர்பாக மேற்படி விலாசத்தில் சந்திக்குமாறு கோருகிறார்.

(39480)

## இந்துமத குருமார் ஒன்றிய அவசர பொதுக்கூட்டம்

இன்று 9-12-95 சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு மட்டுவில் வேரக்ணேி கந்தசாமி கோவிலில் நடைபெறும். வலிகாம, வடமராட்சி, தென்மராட்சிக் குருமார் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளவும்.

தலைவர்
ஜ. மகேஸ்வரக்குருக்கள்

செயலாளர்
சாம். சோமாஸ்கந்தசர்மா

(39479)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வெறும் புரளி!

அந்நிய நாடு ஒன்றின் மீது படையெடுப்பு நடத்தி அதனை வெற்றிகொண்ட பாணியில்—

யாழ்ப்பாணத்தை — வலிகாமத்தைக் — கைப்பற்றியதை ஸ்ரீலங்கா அரசும், அதன் பிரதம தளகர்த்தராகக் கருதப்படுபவருமான அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் நகரில் சிங்கக்கொடி ஏற்றிக் கொண்டாடினார்.

அந்த வெற்றியைப் பிரபல்யப்படுத்துவதற்காக ஸ்ரீலங்காவின் ''மகாராணி'' சந்திரிகா தமது செயலகத்தில் தனியான சிறப்பு வைபவம் ஒன்றையே நடத்தினார்.

மக்கள் இல்லாத ஒரு பிரதேசத்துக்கு, பெரும் பொருட்சேதங்களை உண்டுபண்ணியவாறு, இராணுவம் முன்னேறி வந்த ஒரு நிகழ்வை, ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வாகப் பிரமாதப்படுத்தி தென்னிலங்கைப் பேரினவாதிகள் கொண்டாடி இருக்கிறார்கள்.

நாடாளுமன்றத்தில் அமைச்சர் அனுருத்தவுக்கு மலர்மாலை சூடி வரவேற்கும் அளவுக்கு ''யாழ்ப்பாண வெற்றி'' கொண்டாடப்பட்டிருக்கிறது.

அஸ்கிரிய பீடாதிபதி முதற்கொண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா வரை இலங்கையை (ஸ்ரீலங்கா + தமிழீழம்) தனிச் சிங்கள பௌத்த நாடாக்கிவிட வேண்டும் என்ற வெறி பிடித்த பேரினவாதிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதைப் பெருவெற்றியாக வர்ணித்தும், பாராட்டியும், கொண்டாடியும் வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் மீது இராணுவத் தாக்குதலை ஆரம்பித்தபோது, யாழ்ப்பாண மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிப்பதற்கான போர் என்றுதான் அரசாங்கம் கூறியது. ஆனால் இப்போது...

ஈழத் தமிழர்களின் தலைநகரமாக, கலாசார பண்பாட்டுச் சின்னமாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தை சிங்களப் படைகள் கைப்பற்றி விட்டதாக வெற்றி விழாக்கள் நடத்தப்படுகின்றன. தமிழர்களை வெற்றிகொண்டு விட்டதாகப் பிரமாதப்படுத்துவதற்கும், மகிழ்ச்சி கொண்டாடுவதற்கும் இது ஒப்பானதாகும்.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் கால் பதிக்க முடிந்தமை சிங்களப் பேரினவாதத்துக்கு கிடைத்த ஒருபெரு வெற்றியாகவே தெற்கில் கொள்ளப்படுகிறது; கொண்டாடப்படுகிறது.

சிங்களப் பேரினவாதிகள் தமிழர்களின் நியாயமான உரிமைகளை எப்போதும் அங்கீகரித்ததில்லை; அங்கீகரிக்கப் போவதுமில்லை. அது நிச்சயம்.

சந்திரிகாவின் உத்தேச தீர்வுயோசனையையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை ஆதரிக்கப்போவதும் இல்லை என்றும் சிங்கள பௌத்த பேரினவாதிகள் வெளிப்படையாகத் தெரிவித்து விட்டனர்.

ஆகையால், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அரசியல் தீர்வைக் கொண்டு வரப்போவதாகச் சந்திரிகா சொல்வது வெறும் புரளியே அன்றி வேறெதுவும் அல்ல.

எனவே அரசியல் தீர்வு சமாதானம், ஜனநாயகம், அது — இது என்று அவர் கூறுவது எதனையும் தமிழர்கள் கணக்கில் எடுக்க வேண்டியதில்லை, காதில் போட வேண்டியதில்லை.

# யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் மந்திகையில் பணிபுரிய வேண்டும்

## வேறு இடங்களில் பணியாற்ற அனுமதி இல்லை

சாவகச்சேரி, டிச. 9

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் பணிபுரிந்த வைத்திய ஆலோசகர்களும், பயிலுநர் வைத்தியர்களும் மந்திகை ஆஸ்பத்திரியிலேயே தொடர்ந்து பணியாற்ற வேண்டும். வேறு இடங்களில் பணியாற்ற அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

கொழும்பில் இருந்து நேற்று திரும்பிய யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி. ந. கனகரத்தினம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலையைத் தொடர்ந்து மந்திகையில் இயக்கவும்—

முழுமையாக ஆஸ்பத்திரியை— இயக்குவதற்கு வசதியாக பாடசாலை கட்டடங்களை பாவிக்கவும்—

சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் அவர் தங்கியிருந்த சமயம் சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மற்றும் சுகாதார திணைக்கள அதிகாரிகள், அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் யாழ் ஆஸ்பத்திரி இடமாற்றம் குறித்து விரிவாகப் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் நடந்த பேச்சுக்களில் எட்டப்பட்ட முடிவுகள் குறித்து கிடைத்த மற்றும் தகவல்கள் வருமாறு:

★ யாழ். போதனா வைத்தியசாலையை மந்திகை ஆஸ்பத்திரியில் இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அங்கு இடவசதியில்லையானால் அருகில் உள்ள பாடசாலைகள் மற்றும் தேவாலயங்களில் ஆஸ்பத்திரியின் ஒரு சில பிரிவுகளை இயங்கவும் அனுமதி வழங்கப்பட்டது

★ யாழ். போதனா வைத்தியசாலைக்கான மருந்துகள். எரிபொருள்கள் கப்பல் மூலம் மந்திகைக்கு அனுப்பப்படும்.

இதன்படி நேற்று வந்த கப்பலில் எரிபொருள்கள் எடுத்து வரப்பட்டன. அடுத்து வரும் கப்பலில் மருந்துவகைகள் வந்து சேரும்.

★ அத்தியாவசிய ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய தரத்தில் உள்ள ஊழியர்கள் வேறு இடங்களில் பணியாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் தென்மராட்சி, வடமராட்சி, கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் அவர்கள் பணியாற்றலாம். இந்த மாவட்டங்களை தவிர வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது. (உ-3-173-15)

## மந்திகையில் பாதுகாப்பு வலயம்; ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கோரிக்கை

சாவகச்சேரி, டிச. 9

''மந்திகையில் செயற்படும் யாழ். போதனா வைத்திய சாலை சூழவுள்ள பகுதியை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்ய வேண்டும்''.

இப்படி யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி. என். கனகரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் தங்கியிருந்த சமயம் இந்தக் கோரிக்கையை சுகாதார, பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம் தெரிவித்ததாக அவர் கூறினார்.

யாழ். போதனா வைத்திய சாலை யாழ்ப்பாணத்தில் இயங்கிய சமயம் ஆஸ்பத்திரியை சூழவுள்ள பிரதேசத்தில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயம் போன்று — மந்திகையில் இயங்கும் யாழ். ஆஸ்பத்திரியை சூழவுள்ள பகுதியை பாதுகாப்புவலயமாக பிரகடனம் செய்ய வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மந்திகை ஆஸ்பத்திரி சுற்றாடல் மற்றும் டாக்டர்கள் தங்கியிருக்கும் விடுதி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வரைபடம் ஒன்றை சுகாதார அமைச்சிடமும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கொழும்பு அதிகாரிகளிடமும் அவர் சமர்ப்பித்தார்.

இது தொடர்பாக ஆராய்வதாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் பணிப்பாளருக்கு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை— செஞ்சிலுவைச்சங்கசர்வதேசக் குழுஅதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்களை பணிப்பாளர் நடத்தியுள்ளார்.

(இ-3-273)

## இடம்பெயர்ந்தோருக்கு போரூட் நிறுவனம் உதவி

தென்மராட்சி, டிச. 9

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் தங்கியுள்ள மக்களுக்கு போரூட் நிறுவனத்தினர் இதுவரை 4 லட்சத்து 93 ஆயிரத்து387 ரூபாவை செலவழித்துள்ளனர் என்று நிறுவன இணைப்பாளர் கே. கோகுலதாஸ் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் வடமராட்சிப் பகுதியில் உள்ள புலோலி மெதடிஸ்த தமிஷன் தமிழ் கலவன் பாடசாலை, யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், கரவெட்டி ஞானசூரியர் வித்தியாலயம் ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்கு வழங்கிய உதவிகளுக்கே இத்தொகை செலவழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது [இ-117]

## செஞ்சிலுவைச்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயராஜா, கட்டப்பிராய், வட்டக்குளம், இருபாலை.

பசுபதி நாகம்மா, துணைவி இடம்பெயர்ந்தோர் முகாம், வடடுக்கோட்டை.

பாலயோகன் கமலாம்பிகை, 340, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

புண்ணியமூர்த்தி ரவிராஜன், மே/பா மகாதேவா, 435, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

கருணநாதன் சிறிரங்கநாதன், 326, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

தம்பையா சிதம்பரநாதன் மே/பா எஸ். சிவசுப்பிரமணியம், விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

வேலுப்பிள்ளை ஆறுமுகம், 146, கச்சேரி— நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

திருமதி ஜி. எஸ் செல்லையா, 'தங்கவாசம்' கோப்பாய் வடக்கு, கோப்பாய்

பாக்கியம், மே/பா கணபதி சுழிபுரம், மூளாய்.

சின்னப்பு மயில்வாகனம், ஆடியபாதம் வீதி, நாயன் மார்கட்டு, கல்வியங்காடு.

கமலாம்பிகை பத்மஜெயம், மே/பா. எஸ். மகேந்திரராஜா, அருளையா இடம், கோப்பாய் வடக்கு, கோப்பாய்

திருமதி பிள்ளையம்மா இம்மானுவல் மே/பா. கே. சிவகுமார், ஏ. ஐ. பி., நல்லூர்.

எவ். பரிமளகாந்தன், 422, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

(அ-173)

### ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு

## 3 மாதச் சம்பள முற்பணம் வழங்க அமைச்சு மறுப்பு

சாவகச்சேரி, டிச. 9

தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு 3 மாதங்களுக்கான சம்பள முற்பணம் வழங்குமாறு யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் விடுத்த கோரிக்கையை சுகாதார அமைச்சு ஏற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் ஊழியர்கள் படும் கஷ்டங்கள் குறித்து விளக்கிய பின்னர் ஒன்றரை மாதத்துக்கான சம்பள முற்பணம் வழங்குவதற்கான நிதியை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளதாக ஆஸ்பத்திரி பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த நிதியை திரவப்பணமாக எடுத்துச் சென்று ஊழியர்களுக்கு வழங்க சுகாதார அமைச்சு அனுமதி வழங்கிய போதும்—

பாதுகாப்பு அமைச்சு திரவபணம் எடுத்து வர அனுமதி மறுத்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

காசோலையாக எடுத்து வரப்பட்டுள்ள ஊழியர்களின் சம்பளம், சம்பள முற்பணம் ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

(இ-3-173)

## சில தரங்களைச் சேர்ந்த ஊழியர் சம்பளம் அதிகரிப்பு

தென்மராட்சி. டிச. 9

அண்மைக்காலத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வை பெற்றுக்கொள்ளாத 27 தரங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த நவம்பர் மாதம் முதல் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை (33/95, 34/95) பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 27/94, 29/94, 3/95 ஆகிய சம்பள மீளாய்வில் சம்பள உயர்ச்சி பெறாதவர்களுக்கு 1995 நவம்பர் முதல் சம்பள உயர்ச்சி வழங்கப்பட்டுள்ளது.

முன்னைய சம்பள மீளாய்வில் சம்பள உயர்ச்சி கிடைக்காத 27 தரங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு இந்த சம்பள அதிகரிப்பு பொருந்தும்.

இந்த சம்பள அதிகரிப்பு ஆசிரிய சேவைக்கு ஏற்புடையதல்ல எனச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னைய 27/94 இலக்கச் சுற்றறிக்கையில் சிற்றூழியர் தரத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு மூன்று வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்பட்டது. இதே ஊழியர்களுக்கும் புதிய சம்பள மீளாய்வில் சம்பள உயர்ச்சி வழங்கப்பட்டுள்ளது.

சிற்றூழியர், சாரதிகளின் சம்பளங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## தென்மராட்சியில் வறுமை நிவாரணம்

தென்மராட்சி, டிச 9

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த வறுமை நிவாரண முத்திரை பெறுவோர்களின் நவம்பர், டிசம்பர் மாத புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் பால்மா விசேட முத்திரைப் புள்ளிக்கும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. [ஐ-117]

## திருமலையில் கிரனேட்டுக்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிச. 5

திருகோணமலை பத்தாம் நம்பர் பகுதியில் கடந்த சனியன்று இரவு மூடப்பட்டிருந்த கடை ஒன்றின் வராந்தாவில் இருபது கிரனேட்டுக்களை பாதுகாப்புப் படையினர் கண்டு பிடித்ததாக கொழும்புப் பத்திரிகைஒன்று தெரிவித்தது.

பாதுகாப்புப் படையினரின் ரோந்து வாகனத்தைக் கண்டதும் இருவர் அப்பகுதியிலிருந்து ஓடிமறைந்ததாகவும்—

அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் இருபது கிரனேட்டுக்களைக் கண்டு பிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் அதிரடிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொடி ஏற்றப்பட்டு சுமார் மூன்று மணி நேரத்துக்குள் மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப் படை முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தை அடுத்தே பொது மக்கள் கொல்லப்பட்டதாக அந்த நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்திருந்தார்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் அதிரடிப் படையினர் நடத்திய இந்த படுகொலைகளை அடுத்து அங்கு மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் விவரம் இன்னமும் தெரியவரவில்லை என்று புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. (இ-ஐ-3)


# போலியோ!

**இளம்பிள்ளைவாத நோய் முற்றாக உங்கள் பிள்ளைகளைப் பற்றிக் கொள்ளாமல் தடுக்க ஓர் அரிய சந்தர்ப்பம்**

**சர்வதேச றோட்டறிக் கழகத்தின்**
*அனுசரணையுடன்*

## இன்று டிசம்பர் 9ஆம் திகதி

**இரண்டாவது தடவையாக நாடுபூராகவும் தடை மருந்து இலவசமாக வழங்கப்படவுள்ளது.**

இடம்பெயர்ந்தோரும், மற்றையோரும் தங்கள் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு முன்பு மருந்து கொடுத்திருந்தாலும் திரும்பவும் டிசம்பர் 9 ஆம் திகதி இன்று தடை மருந்தைக் கொடுத்து குழந்தைகளை போலியோ நோயிலிருந்து காப்பாற்றுங்கள்.

முக்கிய குறிப்பு:-

திரும்பவும் மருந்து கொடுப்பதனால் எதுவித பக்க விளைவுகளும் ஏற்படாது என்பதை அறியத்தருகிறோம்.

சமூக சேவை இயக்குநர்
*யாழ். றோட்டறிக் கழகம்*
[39606]


# இரண்டாம் ஆண்டு
# நீங்கா நினைவினில்
## எங்கள் தலைவா! அப்பா!!



வையத்துள்:

18-04-1927

தெய்வத்துள்:

01-12-1993

*அமரர்*

## சங்கரப்பிள்ளை பீதாம்பரம்

(ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை)

**திதி: 09 - 12 - 1995** (சனிக்கிழமை)

ஈராண்டு போனதப்பா! உமைப் பிரிந்தே – நாம்
உலகத்தில் நடைப்பிணமாய் ஆகிவிட்டோம் - அப்பா
எத்திசையைப் பார்த்தாலும் எங்கள் கண்ணில் –
என்றும்
இனிய உருவாய் எழுந்து நிற்பீரே - அப்பா! தலைவா!!
தங்களின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் தங்கள் ஒளியின்றி வாடும்:
அன்பு மனைவி — சிவயோகம்,
பாசமிகு பிள்ளைகள் — மல்லிகாதேவி,
பத்மராணி,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
தற்காலிக முகவரி:
வரணி, கொடிகாமம். (39483)

# 1 ஆம் திகதி பாடசாலைகள்

அடுத்த ஆண்டு முதலாம் தவணைக்காக சகல பாடசாலைகளும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

நாட்டில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி மூடப்பட்டன. அதனால் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் நடைபெறவில்லை.

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகி இரண்டு வாரங்களுக்குள் வகுப்பேற்றப் பரீட்சைகளை நடத்துமாறு கல்வி அமைச்சு உத்தரவிட்டிருக்கிறது. (ஐ)

# ஒரு போதும் யுத்தத்தை நான் ஆதரித்ததில்லை

## வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, டிச. 9

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. என்ற வகையில் நான் யுத்தத்தை ஆதரிப்பதாக எவராவது கூறினால் அதைக் காதில் போட மாட்டேன். நான் என்றுமே யுத்தத்தை ஆதரித்ததில்லை.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடந்துகொண்டிருக்கும் போது சமாதானம் பற்றிய பேச்சுக்கள் எடுபட மாட்டா. அதனாலேயே நான் பேசாது இருந்தேன். என்றும் அவர் கூறினார்.

# தரை வழிப் பாதையை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டத்தை ஏற்றுக் கொண்டு, கணிசமான அளவு ஆயுதங்களை ஒப்படைக்க முன்வருவார்களேயானால் அவர்களுடன் சமாதானப் பேச்சு நடத்துவது குறித்து நாம் ஆலோசிக்கலாம்''. — என்று நேற்று ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டார்.

அங்கு அவர் கூறிய கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:-

★ அரச சார்பற்ற — தனியார் —வெகுசனத் தொடர்பு சாதனங்கள் கடந்த சில மாதங்களாக, பொறுப்பற்ற முறையில் மக்களைக் கோப மூட்டும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இதனால் அந்த சாதனங்களை சேர்ந்த பத்திரிகையாளர்கள் யாழ். செல்வதற்கு அரசினால் அனுமதிக்க முடியாது போயிற்று.

★ மும்முனைத் திட்டம் மூலம் — அதாவது அரசியல், இராணுவ, பொருளாதார நடவடிக்கைகள் மூலம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முயற்சி எடுக்கின்றது. அது குறித்து அமைச்சரவைக்குள் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை ஆனால் சில பத்திரிகைகள் எனக்கும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும் இடையில் கருத்து முரண்பாடு உள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளன. அது தவறு.

★ நாடு நெருப்பில் எரிந்து சாம்பராவதைத் தடுப்பதற்காக எனது சொந்த உயிரையே பணயம் வைத்து நடவடிக்கை எடுத்துள்ளேன்; இதன் மூலம் மீண்டும் ஒரு 1983 ஜூலை நிலை ஏற்படாமல் தவிர்த்துள்ளோம்.

★ புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் அமைதியுடன் வாழ்வதற்கு ஏற்றசூழ்நிலையை உருவாக்குவதற்கு அரசு முன்னுரிமை வழங்கும்.

இடம்பெயர்ந்த யாழ். மக்களை மீண்டும் அங்கு வருமாறு அழைப்பிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால் அத்திட்டங்கள் பற்றிய விவரங்களை தற்போது வெளியிட முடியாது.

★ புலிகளை இராணுவ ரீதியாக முற்றாக அழித்தொழிக்கும் ஆற்றல் எமது பாதுகாப்புப் படையினருக்கு உண்டு என நான் கருதுகிறேன். ஆனால் அரசாங்கத்தின் நோக்கம் அதுவல்ல.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காண்பது என்ற அரசின் நோக்கத்தில் எந்த மாற்றமும் இல்லை.

புலிகள் ஏற்படுத்திய பிரச்சினைகள் காரணமாகவே அரசாங்கம் தற்போதைய நடவடிக்கையை எடுக்க வேண்டி ஏற்பட்டது.

புலிகள் சமாதானத்துக்கு தயாராக இருந்தால் கதவுகள் திறந்தே உள்ளன.

★ இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க எவ்வித ஒத்துழைப்பையும் தர முன்வரவில்லை.

தேசிய பிரச்சினை ஒன்றில் சரியான தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசாங்கத்துக்கு உதவுவது எதிர்க்கட்சியின் கடமையாகும்.

யாழ். நகரைக் கைப்பற்றிய இராணுவ நடவடிக்கையின் வெற்றியைக் குறிக்கும் வகையில் நடத்தப்பட்ட உத்தியோகபூர்வ வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கும், ஐக்கியதேசியக் கட்சியின் செயலாளர் நாயகத்துக்கும் அரசு அழைப்பு விடுத்திருந்த போதிலும் வேறு சில காரணங்களுக்காக அதில் தம்மால் கலந்துகொள்ள முடியாது என அவர்கள் அரசுக்கு பதிலளித்திருந்தனர்.

★ இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் பதவியில் இருந்து வந்த அனைத்து அரசாங்கங்களுமே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

★ வடக்கு, கிழக்குக்கு வெளியே வசிக்கும் தமிழ் மக்கள் மீது — குறிப்பாக — பொலீஸார் கட்டவிழ்த்து விட்டுள்ளதாகக் கூறப்படும் கெடுபிடிகள் பற்றி எனக்குத் தெரியும்.

ஐ. தே. க. ஆட்சிக்காலத்தில் கொடூரச் செயல்களைப் புரிவதற்காக அந்த அரசு தயார் செய்த சில இராணுவ பொலீஸ் அதிகாரிகள் தற்போதும் செயற்படுகின்றனர் இவர்களே தமிழர்கள் அவலமுறுவதற்குக் காரணம்.

★ அரசின் கொள்கைகளை நாட்டு மக்கள் அங்கீகரித்துள்ளனர்.

எனது அரசின் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறுவது தவறு.

— இவ்வாறு சந்திரிகா குறிப்பிட்டார்.

''அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதக்கான சூழலையும் பின்னணியையும் ஏற்படுத்துவதே தற்போதைய இராணுவ நடவடிக்கையின் நோக்கம்'' — என்று அந்தச் செய்தியாளர் மாநாட்டில் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்

(உ-ஐ-3-6)

## கிளாலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
களில் சென்று கொண்டிருந்த மக்கள் மீது கடந்த மாதம் 29ஆம்திகதி கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டனர்

கிளாலி நீரேரி மீது அரசு விதித்துள்ள தடையை நீக்க ஐ.நா. செயலாளர் நாயகம் தனது நல்லெண்ணத்தைப் பயன் படுத்தி ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது (ஐ)

## ஸ்ரீலங்கா அரசு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விழப்போகிறது.

வடக்கு கிழக்கில் தமிழர்களுக்குத் தன்னாட்சி வழங்கும் அரசின் தீர்வுத் திட்டத்தை சிங்கள ஆதிக்கம் நிறைந்த நாடாளுமன்றம் எதிர்க்கும். இது நாட்டின் 12 சதவீத தமிழ் சிறுபான்மையினரை மேலும் ஒதுக்கப்பட்ட நிலைக்குத் தள்ளிவிடும்.

தமிழர்களின் மரபு வழி வந்த கலை, பண்பாட்டு கல்வி மையமான யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியால் அவர்கள் மனம் புண்பட்டுப் போயிருக்கிறார்கள்.

தாம் முறியடிக்கப்பட்டு விட்டதாக அவமானப்படுத்தப்பட்டு விட்டதாக உணர்ந்துள்ளனர்.

தலைநகரைப் பாதுகாப்பதற்கும், புலிகளை அவர்களின் புதிய மறைவிடத்தில் கண்டுபிடித்துப் போராடவும் ஒரு லட்சம் பேரைக் கொண்ட இராணுவம் மேலும் 10 ஆயிரம் பேரை புதிதாகச் சேர்க்கவுள்ளது.

கொழும்பில் நடைமுறைப் படுத்தப்படும் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் கெரில்லா தாக்குதல் குறித்த அச்சத்தின் அறிகுறிகளே.

சுற்றுலா பயணிகள் இனி வரமாட்டார்கள்; பொருளாதாரம் பாதிக்கப்படும்.

யாழ்ப்பாண வெற்றி நீண்டதூர விளைவுகளை ஏற்படுத்தலாம். இது இரு இனத்தவரையும் மேலும் பிரிந்து நிற்கச் செய்யும்.

செலவு அதிகரிக்கும்; ஜனாதிபதியின் நம்பகத் தன்மை பாதிக்கப்படும்.

— இவ்வாறு ''ரைம்ஸ்'' கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னையா பவளம்

**(பவுண்)**

சுதுமலை வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்போது மட்டுவில் தெற்கு அம்பிகா இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பவளம் (பவுண்) நேற்று (8 - 12 - 95) வெள்ளி காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அளவெட்டி பொன்னையாவின் அன்பு மனைவியும், இராசதுரை, காலஞ்சென்ற பூரணம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராசா (சுதுமலை), சின்னராசா (தொண்டமானாறு), மணியம் (வெடிக் கொம்பனி மட்டுவில்), தேவராசா (டோகா), ராசன் (சுதுமலை), பேபி, குஞ்சு, பட்டுராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவீந்திரன் (ஜேர்மனி), தெய்வேந்திரன் (சுதுமலை), சுதாகர் (ஜேர்மனி), வசந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை மட்டுவில் தெற்கு அம்பிகா இல்லத்தில் இன்று (9 - 12 - 95) சனிக்கிழமை நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
**பொ. மணியம் (மகன்)**
(புறா மார்க் வெடித் தொழிலகம் மட்டுவில்)

(39482)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 9-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org